ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2368/23 - 2024 ජනවාරි මස 24 වැනි බදාදා - 2024.01.24

2368/23 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: BD/LG/LND/2/9/4.
காணி அமைச்சின் இல.: 4-3/8/2016/PC/205.

பது/மில்லபெத்த வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணம், பதுளை மாவட்டத்தில் லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவு

**துண்டு இல. 01 - காணியின் பெயர்: ஹொப் டன் தோட்டம்; விஸ்தீரணம்: 0.4535 ஹெக்டயார்**

வடக்கு: மில்லபெத்த பிரிவில் ஒரு பகுதி (காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் உரிமை கோரும் ஹொப்டன் தோட்டம், வீதி மற்றும் எம். யோகநாதன் உரிமை கோரும் ஹொப்டன் தோட்டம்; கிழக்கு: மில்லபெத்த பிரிவில் ஒரு பகுதி (எம். யோகநாதன் மற்றும் டீ. எம். கருணாரத்ன உரிமை கோரும் ஹொப்டன் தோட்டம்); தெற்கு: மில்லபெத்த பிரிவில் ஒரு பகுதி (எம். யோகநாதன் மற்றும் டீ. எம். கருணாரத்ன உரிமை கோரும் ஹொப்டன் தோட்டம்) பி. வ. இல. 686 இல் துண்டு இலக்கம் 11.1 மற்றும் துண்டு இலக்கம் 2; மேற்கு: பி. வ. இல. 686 இல் துண்டு இலக்கம் 11.1 மற்றும் துண்டு இலக்கம் 2 பி. வ. 2031 இல் துண்டு இலக்கம் 2 மற்றும் மில்லபெத்த பிரிவில் ஒரு பகுதி (காணி சீர்திருத்த ஆணைக் குழுவினால் உரிமை கோரும் ஹொப்டன் தோட்டம்).

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம்

ஆண்டு பங்குனி மாதம் 25 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு லுணுகலை பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும் மேலும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 11 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரண்டு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நிரோஷா சாந்தனி ஹென்னாயக,
பிரதேச செயலாளர்,
லுணுகலை.

பிரதேச செயலகம்,
லுணுகலை,
2024, சனவரி 22.

EOG 01 - 0210